[2010 ஏப்ரல் 16

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் சில நேரங்களில் ஐயப்பாட்டைக் கிளப்புவதிலோ, அரசினுடைய கவனத்திற்கு ஒரு செய்தியைக் கொண்டு வருவதிலோ தவறு ஒன்றுமில்லை. ஆனால், என்ன செய்தியைக் கொண்டு வரப் போகிறார்கள் என்று Treasury Bench-க்கு தெரிந்தால்தான் அதற்கு விடை அளிக்கக்கூடிய ஆயத்தத்தோடு நாங்கள் வர முடியும். பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை ஒவ்வொரு உறுப்பினரும் எழுந்து, எழுந்து சொன்னால் எங்களால் எப்படிப் பதில் சொல்லமுடியும்? எனவே, தாங்கள் அருள்கூர்ந்து--அவர்கள் கேட்பதற்கு உரிமை உண்டு. பதில் சொல்வதற்கு எங்களுக்குக் கடமை உண்டு. எனவே, அவர்கள் கேட்பது நியாயம் இல்லை என்று நாங்கள் மறுக்கவில்லை. உறுப்பினர்கள் என்ன கேட்க விரும்புகிறார்களோ, அதைத் தங்களிடத்திலே தெரிவித்து, இதை இந்த உறுப்பினர் கேட்க விரும்புகிறார், அரசுத் தரப்பில் பதில் இருக்கிறதா என்று கேட்ட பிறகுதான் அதை நீங்கள் அனுமதிக்க வேண்டும். இல்லாவிட்டால் கேள்வி மட்டுமே வரும். அரசாங்கத் தரப்பிலே பதில் சொல்வதாக வராது. இதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனி எதையும் எடுக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

2. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, இருக்கையில் இல்லை. அவர் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

***திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2010 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 138 முதல் 142 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுத் தலைவர் அவர்களின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.